## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்

**முன்னிலை: திரு. P. ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,**
**சத்தியமங்கலம்.**

**2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனி மாதம் 02ம் நாள்**
**2026ம் வருடம் ஜூன் மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 49/2023**

**CNR. No.TNED07-003882-2023**

அரசுக்காக
காவல் துறை ஆய்வாளர்,
புளியம்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண். 56/2023. ..... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

ஜாய்சன் ஜெயராஜ் (26/2023)
த/பெ. அருள்ராஜ்
க.எண்.26/48, சவேரியார் கோவில் தெரு,
பெரிய கொடிவேரி,
கோபிசெட்டிபாளையம்.
ஈரோடு. ....எதிரி

**<u>Particulars Under Rule 106 of Criminal Rules of Practice 2019</u>**

| | |
|---|---|
| Name of the Police Station and Cr No. | Puliyampatti Police Station, Cr.No. 56/2023 |
| Accused Name | Joyson Jayarah |
| Father / Husband Name | S/o.Arulraj |
| Occupation | Coolie |
| Address | D.No.26/48, saveriyar kovil street, Periya Kodiveri, Gobichettipalayam, Erode. |
| Age | 26/2023 |

| | |
|---|---|
| Occurrence | 15.02.2023 |
| Complainant | 16.02.2023 |
| Apprehension | Nil |
| Released on Bail | Station Bail |
| Commitment | Not Applicable |
| Commencement of trial | 18.03.2026 |
| Closure of trial | 10.06.2026 |
| Sentence or order | Acqittal |
| Service of Copy of Judgment an accused | Nil |
| Explanation of delay | Delayed by both side |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 26.06.2023ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.ஹலன் எலிசபெத்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கு சாட்சிகள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதங்கள் ஆகியவற்றை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. இவ்வழக்கானது புளியம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.56/2023 இ.த.ச.பிரிவுகள் 279, 304-A ன் கீழ் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2. <u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

கடந்த 15.02.2023ம் தேதி இரவு 08.30மணியளவில் கோவை - சத்தியமங்கலம்

மெயின் ரோடு VRT மில் அருகில் இவ்வழக்கில் இறந்துபோன வேலன் (எ) பழனிச்சாமி என்பவர் மேற்படி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து ரோட்டை கடந்து சென்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த எதிரி ஜாய்சன் ஜெயராஜ் என்பவர் TN 36 AJ 2181 ராயல் என்பீல்டு மோட்டார் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், மனித உயிருக்கு உடைமைக்கும் ஆபத்து ஏற்படும் வகையில் ஆரன் அடிக்காமலும் ரோட்டை கடந்து சென்று கொண்டிருந்த வேலன் (எ) பழனிச்சாமி என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் வேலன் (எ) பழனிச்சாமி என்பவருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியுள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

3. இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் சி.சி.எண்: 49/2023 ஆக அழைப்பாணை வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்களை கு.வி.மு.ச பிரிவு 207 –ன் படி இலவசமாக வழங்கி ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304–Aன் கீழ் குற்றச்சாட்டுகளின் சாரம்சம் குறித்து எதிரிக்கு விளக்கி வினவியபோது எதிரி பொய்வழக்கு என மறுத்து பதிலளித்தும், தனக்கு எதிரான குற்ற முகாந்திரங்களையும் மறுத்துரைத்ததால் எதிரி மீதான வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>

இவ்வழக்கின் அ.சா.1 செல்வி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் தான்

தற்போது வடக்குப்பேட்டை அண்ணா நகரில் வசித்துக்கொண்டு மருத்துவமனையில் வேலை செய்து வருவதாகவும், இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன வேலன் தனது கணவர் என்றும், ஆண்டுகளுக்கு முன் தன் கணவர் புளியம்பட்டிக்கு அருகில் உள்ள மில் அருகே நடந்து சென்றுகொண்டிருந்தபோது எதிர்புறமாக வந்த இருசக்கர வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு அவரை மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது ஆம்புலன்ஸ் டிரைவர் மேற்படி விபத்து குறித்து தனக்கு போன் மூலமாகத் தெரிவித்ததாகவும், தன் கணவரை சத்தியமங்கலத்திலிருந்து பெருந்துறை அரசு மருத்துவமனை அனுப்பி வைத்ததாகவும், அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள ரேகை தன்னுடையதுதான். தனது கணவர் 10 நாட்களுக்குப் பின்பு வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டதாகவும், வீட்டிற்கு வந்து 3 நாள் கழித்து மீண்டும் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றதாகவும், அங்கு 8 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்பு சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கின் அ.சா.2 சகுந்தலா என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது கோபியில் வசித்துக்கொண்டு பூக்கடை வைத்து நடத்தி வருவதாகவும், இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன வேலன் தனது அண்ணன் என்றும், அ.சா.1 தனது அண்ணி என்றும், 15ம் தேதி 2023ம் வருடம் மாதம் ஞாபகம் இல்லை என்றும், தன் அண்ணன் வேலனுக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும், அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், தனது அண்ணனை 10 நாட்களுக்குப் பின்பு வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டதாகவும், வீட்டிற்கு வந்து 3 நாள் கழித்து மீண்டும் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றதகாவும், அங்கு 8 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்பு சிகிச்சை பலனளிக்காமல்

இறந்துவிட்டதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. இவ்வழக்கின் அ.சா.3 துரைசாமி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது புளியம்பட்டியில் வசித்துக்கொண்டு டிரைவராக வேலை செய்து வருவதாகவும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 தன்னுடையதுதான் என்றும், சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன்பு டி.ஆர்.டி. மில்லிற்கு அருகே ஒரு விபத்து நடந்திருந்ததாகவும், அந்த இடத்தைப் பார்த்து போலீசார் வரைந்துகொண்டார்கள் என்றும், அதற்காக தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், தான் செய்து கொடுத்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. இவ்வழக்கின் அ.சா.4 பாபு என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது புளியம்பட்டியில் வசித்துக்கொண்டு டிரைவராக வேலை செய்து வருவதாகவும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.3 தன்னுடையதுதான் என்றும், தான் டி.ஆர்.டி. மில்லிற்கு அருகே நின்றுகொண்டிருந்தபோது போலீசார் வந்து விபத்து சம்மந்தமாக ஒரு கையெழுத்து கேட்டதால் தான் செய்து கொடுத்ததாகவும், எத்தனை நாட்களுக்கு முன் செய்து கொடுத்தேன் என்று நினைவில் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. இவ்வழக்கின் அ.சா.5 ஜோதி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது சத்தியமங்கலத்தில் வசித்துக்கொண்டு கம்பெனியில் வேலை செய்து வருவதாகவும், இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன வேலன் தனது அண்ணன் என்றும், சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு தனது அண்ணன் வேலனுக்கு விபத்து ஏற்பட்டதாகக் கேள்விப்பட்டு சத்தியமங்கலம் அரசு மருத்தவமனைக்கு சென்றதாகவும், விபத்தில் தன்

அண்ணன் இறந்துவிட்டார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. இவ்வழக்கின் அ.சா.6 வைரம் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கூடுதல் பொறுப்பாக புளியம்பட்டி காவல் நிலைய பணி மேற்கொள்வதாகவும், இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் மதியழகன், முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் ராஜாராம் மற்றும் புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் அன்பரசு ஆகியோர்கள் பணி மாறுதலாகி சென்றுவிட்டதால் அவர்களுக்காக வழக்குக் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளிப்பதாக கூறி கடந்த16.02.2023-ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் மதியழகன் என்பவர் நிலையப் பொறுப்பிலிருந்தபோது சத்தி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற RTA இன்டிமேசனைப் பெற்று சத்தி அரசு மருத்துவமனை சென்று விசாரித்தபோது அடிபட்ட வேலன் என்ற பழனிச்சாமி என்பவர் மேல் சிகிச்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவமனை சென்றிருப்பதாகத் தகவல் கிடைக்கப் பெற்று அங்கு சென்று விசாரித்தபோது அவர் அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனை சென்றிருப்பதாகத் தெரியவரவே அங்கு சென்று பார்த்தபோது அவர் மயக்க நிலையில் ICU-வில் இருந்ததால் அவரது மனைவி செல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து புளியம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.56/2023 இ.த.ச. பிரிவுகள் 279, 337-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஐ பதிவு செய்தார்.

11. பின்னர் புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் ராஜாராம் பார்வைக்கு வைக்க அவர் பெற்று 16.02.2023-ம் தேதி 18.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் துரைசாமி, பாபு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 தயார் செய்து சாட்சிகளிடம்

கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் சாட்சிகள் செல்வி, துரைசாமி, பாபு ஆகியோர்களைத் தனித்தனியே விசாரித்த வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இந்த வழக்கு விபத்தில் அடிபட்ட வேலன் என்ற பழனிச்சாமி என்பவர் 13.03.2023–ம் தேதி 10.15 மணிக்கு சிகிச்சை பலனளிக்காமல் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக தகவல் கிடைக்கப் பெறவே, இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளான 279, 337 லிருந்து 279, 304–A இ.த.சவாக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

12. பின்னர் வழக்குக் கோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அன்பரசு பார்வைக்கு வைக்க அவர் அதனைப் பெற்று, இறந்துபோன வேலன் என்கிற பழனிச்சாமி என்பவரின் பிரேதம் கோவை அரசு மருத்துவமனை சவக்கிடங்கலிருந்ததை பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஐ தயார் செய்ததாகவும், இறந்துபோன என்பவரின் வேலன் என்கிற பழனிச்சாமி இறப்பிற்கான காரணம் அறியும்பொருட்டு வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை தலைமைக் காவலர் சிவக்குமார் மூலமாக பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் செல்வி என்பவர் மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் லட்சுமணன், முருகேஷ், சகுந்தலா, ஜோதி ஆகியோர்களைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

13. பின்னர் எதிரியைத் தேடி வந்த நிலையில் எதிரியை 17.02.2023–ம் தேதி காவல் நிலையத்தில் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து தக்கப் பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் 21.02.2023–ம் தேதி இந்த வழக்கு விபத்திற்குள்ளான TN 36 AJ 2181 என்ற ராயல் என்பீல்டு வாகனத்தை மோட்டார் ஆய்வாளர் அவர்களுக்கு ஆய்விற்காக அனுப்பி அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன

ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஐ பெற்று, பின்னர் இறந்துபோன வேலன் என்கிற பழனிச்சாமிக்கு முதலுதவி சிகிச்சையளித்த சத்தி அரசு மருத்துவமனை மருத்துவர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துப் பதிவேட்டு அ.சா.ஆ.10 ஐ பெற்றதாகவும், பின்னர் இறந்துபோன வேலன் என்கிற பழனிச்சாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேதப் பரிசோதனை மேற்கொண்ட பெருந்துறை அரசு மருத்துவமனை மருத்துவர் சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஐ பெற்றார் என்றும், பின்பு எனது விசாரணையை முடித்து எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304-A-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கைத் தாக்கல் செய்தார் என்பது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் ஆகும்.

14. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி)ன் கீழ் வினவியபோது பொய்சாட்சி, பொய் வழக்கு என்று எதிரி அதனை மறுத்து கூறி பொய்சாட்சி என்று கூறி தன்னுடைய தரப்பில் சாட்சிகள் இல்லை என தெரிவித்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் குறியீடு செய்யப்படவில்லை.

15. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் அ.சா.1 செல்வி, அ.சா.2 சகுந்தலா, அ.சா.3 துரைசாமி, அ.சா.4 பாபு, அ.சா.5 ஜோதி என்பவர்கள் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்காத சாட்சிகள் என்பதாலும், இவ்வழக்கு விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் இல்லை என்பதாலும், பிற சாட்சிகளை விசாரித்து பயனில்லை என்பதால் இவ்வழக்கின் பிற சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பில் Dispense செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், அரசு தரப்பில் அ.சா.6 ஆக தற்போதைய சத்தியமங்கலம் காவல் துறை ஆய்வாளராக பணிபுரிந்து கூடுதல் பொறுப்பாக புளியம்பட்டி காவல் துறை ஆய்வாளர் வைரம் என்பவர் விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகவே இந்நீதிமன்றம் சட்டப்பிரகாரம் தீர்ப்பு வழங்கும் படி வாதம் செய்யப்பட்டது. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் கிடையாது என்றும், ஆகவே இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.6 புளியம்பட்டி தற்போதைய பொறுப்பு காவல் துறை ஆய்வாளரின் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரியை தண்டிக்க இயலாது என்றும், ஆகவே இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

16. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரியின் மீதான இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழான குற்றச்சாட்டுகளை எவ்வித ஐய்யப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>17.தீர்வு</u>

இவ்வழக்கின் அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 304–A ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் எவ்விதமான ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யவேண்டுமெனில் இவ்வழக்கின் அரசு தரப்பில் இவ்வழக்கில் கூறியுள்ள விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்யவேண்டியது அவசியமாகும். இவ்வழக்கின் அரசுதரப்பில் இவ்வழக்கு விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட புகார்தாரர் அ.சா.1 செல்வி தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில்

1. **நான் தற்போது வடக்குப்பேட்டை அண்ணா நகரில் வசித்துக்கொண்டு**

**மருத்துவமனையில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன வேலன் எனது கணவர் ஆவார்.**
**2. 3 ஆண்டுகளுக்கு முன் என் கணவர் புளியம்பட்டிக்கு அருகில் உள்ள மில் அருகே நடந்து சென்றுகொண்டிருந்தபோது எதிர்புறமாக வந்த இருசக்கர வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு அவரை மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது ஆம்புலன்ஸ் டிரைவர் மேற்படி விபத்து குறித்து எனக்கு போன் மூலமாகத் தெரிவித்தார். என் கணவரை சத்தியமங்கலத்திலிருந்து பெருந்துறை அரசு மருத்துவமனை அனுப்பி வைத்தார்கள்.**
**3. அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள ரேகை என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது கணவர் 10 நாட்களுக்குப் பின்பு வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். வீட்டிற்கு வந்து 3 நாள் கழித்து மீண்டும் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு 8 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்பு சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

18. ஆகவே இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 செல்வி தன்னுடைய சாட்சியத்தில் தனக்கு விபத்து குறித்து போன் மூலம் தகவல் கிடைக்கப்பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளதால் இவ்வழக்கின் அ.சா.1ன் சாட்சியத்தை வைத்து இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் இவ்வழக்கு விபத்து ஏற்பட்டது என்பதையும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தை இவ்வழக்கின் எதிரி தான் ஓட்டி வந்தார் என்று இந்நீதிமன்றத்தால் உறுதி செய்ய இயலாது.

19. மேலும் இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 சகுந்தலா , அ.சா.5 ஜோதி ஆகியோர்கள் தாங்கள் இவ்வழக்கு விபத்தை நேரில் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆகவே அவர்களுடைய சாட்சியங்களை வைத்து இவ்வழக்கு விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் இவ்வழக்கு விபத்து ஏற்பட்டது என்பதையும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தை இவ்வழக்கின் எதிரி தான் ஓட்டி வந்தார் என்று

இந்நீதிமன்றத்தால் உறுதி செய்ய இயலாது.

20. மேலும் இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 துரைசாமி, அ.சா.4 பாபு ஆகியோர்கள் தாங்கள் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தங்களுக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆகவே இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 துரைசாமி, அ.சா.4 பாபு ஆகியோர்கள் இவ்வழக்கின் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

21. மேலும் இவ்வழக்கில் அ.சா.6 ஆக தற்போது சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கூடுதல் பொறுப்பாக புளியம்பட்டி காவல் துறை ஆய்வாளர் வைரம் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தையும், அவர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் மூலமும் இவ்வழக்கில் கூறியுள்ள விபத்து எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக உறுதி செய்ய இயலாது. காரணம் அவர் இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த அதிகாரி கிடையாது. அவர் பதவி நிலை சாட்சியம் மட்டுமே ஆவார். ஆகவே இவ்வழக்கில் கூறியுள்ள விபத்தானது இவ்வழக்கின் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதாக அரசு தரப்பில் சரிவர நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகவே இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 304-A ன் கீழான குற்றச்சாட்டுகளை எவ்விதமான ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22. ஆகவே, இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் எவ்விதமான ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்வது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

23. முடிவாக, இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 279, 304–A ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் எவ்வித ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை குற்றவாளி அல்ல என முடிவு செய்து இவ்வழக்கின் எதிரியை கு.வி.மு.ச. 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

24. இவ்வழக்கிற்காக எதிரியால் இயற்றி கொடுக்கப்பட்ட பிணைமுறி பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லையெனில் தானாகவே ரத்து ஆகிவிடும்.

25. இவ்வழக்கில் அரசு தரப்பில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து எந்த உத்தரவும் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 16 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR
Date: 2026.06.16 17:49:21 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 18.03.2026 | திருமதி. செல்வி (புகார்தாரர்) |
| அ.சா.2. | 18.03.2026 | திருமதி. சகுந்தலா |
| அ.சா.3. | 01.04.2026 | திரு. துரைசாமி |
| அ.சா.4 | 01.04.2026 | திரு. பாபு |
| அ.சா.5 | 03.06.2026 | திருமதி. ஜோதி |
| அ.சா.6 | 10.06.2026 | திரு. வைரம் (தற்போதைய சத்தியமங்கலம் காவல் துறை |

| | | |
|---|---|---|
| | | ஆய்வாளர் கூடுதல் பொறுப்பு புளியம்பட்டி காவல் துறை ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 16.02.2023 | புகார்வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2/அ.சா.3 | 16.02.2023 | பார்வை மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள அ.சா.3 துரைசாமி என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.3/அ.சா.4 | 16.02.2023 | பார்வை மகஜர் ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள அ.சா.4 பாபு என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.4/அ.சா.6 | 16.02.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5/அ.சா.6 | 16.02.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6/அ.சா.6 | 16.02.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7/அ.சா.6 | 13.03.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.8/அ.சா.6 | 13.03.2023 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.9/அ.சா.6 | 21.02.2023 | TN 36 AJ 2181 என்ற ராயல் என்பீல்டு வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.10/அ.சா.6 | 15.02.2023 | விபத்துப் பதிவேடு |
| அ.சா.ஆ.11/அ.சா.6 | 13.03.2023 | பிரேதப் பரிசோதனை அறிக்கை |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்:—</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:—</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சான்று பொருள்கள் :—</u>** இல்லை

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.06.16 17:49:29 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

**குறிப்பு.**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி ஜாமினில் இருந்தார்.

2)எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT AT SATHYAMANGALAM

## CASE SUMMARY

### CC.NO.49/2023

| Period of Remand of accused | The date of filling of the complaint/final Report in the court | The date of committal of the case to the court of sessions | The date of questioning of the accused U/s.228, 240, 246 and 251 of the code of criminal procedure the case maybe | Filling of all miscellaneous petition and the result including the result on challange before superior court except routine petitions like petitions U/s. 317 of the code | Date of examination in chief and cross examination of the witness | | | Date of examination of the accused U/s. 313 of the code | Date of upsconder of accused and his appearance/production as the case maybe | Grand of stay by superior court and the results thereof |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Nil | 26.06.2023 | Nil | 12.03.2024 | MP No.1/2026 Petition allowed | Pws/ Dws | Chief | Cross | 16.06.2026 | - | - |
| | | | | | Pw1 | 18.03.2026 | 18.03.2026 | | | |
| | | | | | Pw2 | 18.03.2026 | 18.03.2026 | | | |
| | | | | | Pw3 | 01.04.2026 | 01.04.2026 | | | |
| | | | | | Pw4 | 01.04.2026 | 01.04.2026 | | | |
| | | | | | Pw5 | 03.06.2026 | 03.06.2026 | | | |
| | | | | | Pw6 | 10.06.2026 | 10.06.2026 | | | |

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.06.16 17:49:35 +0530

Judicial Magistrate,
Sathyamangalam